2114

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

නර්තනය (භරත) I
நாட்டியம் (பரதம்) I
Dancing (Bharatha) I

53 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
* விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** நடராஜர் திருவுருவத் தத்துவத்தில் இறைவனது நித்தியத் தன்மையைக் குறிப்பது
(1) திருக்கரம் (2) பூநூல் (3) தீயகல்
(4) திருச்செவி (5) நீலகண்டம்

**2.** சாத்வீக பாவங்களில் 'வேபது' என்பது
(1) கண்ணீர் சொரிதல் (2) நிறமாற்றம் (3) நடுங்குதல்
(4) மூர்ச்சித்தல் (5) வியர்த்தல்

**3.** திஸ்ர ஜாதி மட்டிய தாளம் மிஸ்ர கதி அடையும் போது எடுத்துக்கொள்ளும் எண்ணிக்கை
(1) 35 (2) 49 (3) 56 (4) 70 (5) 77

**4.** பூசைத் தாளம் வாசிக்கப்பட்டு ஆரம்பிக்கப்படும் கூத்து
(1) பறைமேளக் கூத்து (2) வடமோடிக் கூத்து
(3) தென்மோடிக் கூத்து (4) வசந்தன் கூத்து
(5) வாசாப்புக் கூத்து

**5.** பரதமுனிவர் நாட்டிய சாஸ்திரத்தினை எந்த மொழியில் எழுதினார்?
(1) கன்னடம் (2) ஹிந்தி (3) தெலுங்கு (4) பாளி (5) சமஸ்கிருதம்

**6.** நாயகர்களின் தூதர்கள் எனப்படுவோர் யாவர்?
(1) சடன், வைஷிகன், விடன், திருஷ்டன்
(2) விடன், சேடன், சடன், அநுகூலன்
(3) பீடமர்த்தன், விடன், சேடன், விதூஷகன்
(4) பீடமர்த்தன், சேடன், சடன், விதூஷகன்
(5) விடன், சேடன், விதூஷகன், வைஷிகன்

**7.** சிருங்கார ரஸத்திற்குப் பயன்படுத்தப்படும் ஸ்வரங்கள்
(1) காந்தாரம், நிஷாதம் (2) சட்ஜம், ரிஷபம் (3) நிஷாதம், சட்ஜம்
(4) மத்திமம், பஞ்சமம் (5) மத்திமம், சட்ஜம்

**8.** நாட்டிய சாஸ்திரத்தில் பதினொராவது அத்தியாயத்தில் குறிப்பிடப்படும் விடயங்கள் யாவை?
(1) மண்டலங்கள் (2) சாரி அசைவுகள் (3) சுவைகள்
(4) அரங்குகள் (5) தாளக் கருவிகள்

[பக். 2 ஐப் பார்க்க

Past Papers Wiki



9. சாரி பேதத்தில் இடம்பெறும் பாதநிலை
(1) குட்டணம் (2) மோடிதம் (3) அலகம் (4) ஆலீடம் (5) ப்ரத்யாலீடம்

10. "கலியுக வரதன் கண்கண்ட தெய்வமாய் காட்சியளிப்பது பழநியிலே..." என்பது
(1) விருத்தம் (2) பதவர்ணம் (3) கீர்த்தனம் (4) சப்தம் (5) திருப்புகழ்

11. ;;;; தகிட ததிங்கிணதொம் | தகிட ததிங் கிணதொம் |
தகிட ததிங்கிணதொம் //
மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு தாளாங்கத்தில் அமையக்கூடிய 'ததிங்கிணதொம்' அமைந்துள்ள ஜாதி
(1) திஸ்ரம் (2) சதுஸ்ரம் (3) கண்டம் (4) மிஸ்ரம் (5) சங்கீர்ணம்

12. 'அபிசாரிகா' எனும் நாயகியின் குணவியல்புகளை அபிநயிக்கும் செய்கைகள் யாவை?
(1) மன்மத பூஜா, ஜலக்கிரீடை
(2) நித்திரையற்றிருத்தல், உடம்பிளைத்தல்
(3) கண்ணீர் விடுதல், மயங்குதல்
(4) கணவனுடன் கூடி வாழ்தல் போன்ற இன்பக் கனவுகள், கற்பனைகளில் திளைத்தல்
(5) முணுமுணுத்துப் பேசுதல், உணர்ச்சிவசப்படுதல்

13. கதகளி நடனத்தில் நற்குணம், சிருங்காரம் என்பவற்றைக் குறிக்கும் நிறங்கள் முறையே
(1) சிவப்பு, இளம் பச்சை (2) பச்சை, வெள்ளை
(3) பச்சை, இளம் பச்சை (4) மஞ்சள், சிவப்பு
(5) நீலம், இளம் பச்சை

14. "வேலவரே உமைத் தேடி ஒரு மடந்தை விடியுமளவு காத்திருக்கிறாள் வகையென்ன..." என்ற பாடலடி உணர்த்தும் நாயகி
(1) கண்டிதா (2) அபிசாரிகா (3) விப்ரலப்தா
(4) ஸ்வாதீனபதிகா (5) வாசக சஜ்ஜிகா

15. பொம்மலாட்ட விளையாட்டாக ஆடப்பட்டு வந்த கலைவடிவம்
(1) பாகவதமேளா (2) குற்றாலக்குறவஞ்சி (3) கூடியாட்டம்
(4) காவடிச்சிந்து (5) யக்ஷகானம்

16. கர்த்தரீ அடவினை ஒரு முறை முழுமையாகச் செய்யும் பாத நிலையினை உள்ளடக்கிய பாதபேதம்
(1) உத்ப்ளவன பேதம் (2) ப்ரமரீ பேதம் (3) ஸ்தானக பேதம்
(4) மண்டல பேதம் (5) பாதசாரிகா பேதம்

17. "அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்" என்பதில் 'அண்ணல்' என்பதனை அபிநயிக்க வலது, இடது கைகளில் பயன்படுத்தப்படும் முத்திரைகள் முறையே
(1) முஷ்டி, பதாகம் (2) பதாகம், கபித்தம் (3) திரிசூலம், சிகரம்
(4) கபித்தம், சிகரம் (5) திரிப்பதாகம், அர்த்தசந்திரன்

18. பிருஷ்ட குட்டிமம், ஸர்வதோபத்ரம் ஆகிய நிருத்தங்கள் நிகழ்த்தப்படும் ஆலயம்
(1) சிவன் ஆலயம் (2) வீரபத்திரர் ஆலயம் (3) விஷ்ணு ஆலயம்
(4) ஐயப்பன் ஆலயம் (5) வைரவர் ஆலயம்

19. திரிப்பதாகம், கடஹாமுகம், அலபத்மம் ஆகிய முத்திரைகளை மாத்திரம் பயன்படுத்தி செய்யப்படும் அடவுகள்
(1) முதலாவது பரவலடவு, முதலாவது குதித்து மெட்டடவு
(2) ஐந்தாவது நாட்டடவு, இரண்டாவது குதித்து மெட்டடவு
(3) மூன்றாவது தத்தெய்தாஹா அடவு, இரண்டாவது தத்தெய்தாம் அடவு
(4) நான்காவது பரவலடவு, எட்டாவது நாட்டடவு
(5) மூன்றாவது குதித்து மெட்டடவு, நான்காவது தத்தெய்தாஹா அடவு

20. 'கொஹொம்ப கங்காரிய' சடங்கில் இடம்பெறும் உப பிரிவுச் சடங்கு முறைகளில் ஒன்று
(1) பொறுயக்கம (2) கிரி மடுவ (3) பகன் மடுவ
(4) சூனியம்யாகய (5) றட்ட யக்கும

[பக். 3 ஐப் பார்க்க

**21.** கண்ட ஜாதி துருவ தாளத்தின் அங்கக் குறியீடாக அமைவது எது?

(1) $|_5$ O $|_5$ $|_5$
(2) $|_5$ O $|_5$
(3) $|_5$ ◡O
(4) $|_5$ $|_5$ O O
(5) $|_5$ O O

**22.** சிவலோகத்தைக் குறித்து ஆடப்படும் வண்ணம் யாது?

(1) அஸ்த்ருஸ வண்ணம்
(2) ஈரடி வண்ணம்
(3) ஸுரபதி வண்ணம்
(4) வைரோடி வண்ணம்
(5) நையடி வண்ணம்

**23.** சிருங்கார ரஸ அனுபவத்திற்கும் மனோபாவத்திற்கும் தகுந்தபடி நாயகிகள் எத்தனை வகைப்படுவர்?

(1) 4
(2) 8
(3) 12
(4) 16
(5) 24

**24.** இந்தியாவின் வடபகுதியில் கதக் நடனம் குறிப்பாக நிலவிவரும் பிரதேசங்கள் யாவை?

(1) ராஜஸ்தான், குஜராத், உத்தரப் பிரதேசம், மத்திய பிரதேசம்
(2) ராஜஸ்தான், குஜராத், உத்தரப் பிரதேசம், கிருஷ்ண மாவட்டம்
(3) ராஜஸ்தான், குஜராத், கிருஷ்ண மாவட்டம், மத்திய பிரதேசம்
(4) ராஜஸ்தான், குஜராத், உத்தரப் பிரதேசம், கேரள மாநிலம்
(5) ராஜஸ்தான், குஜராத், ஒரிசா, மத்திய பிரதேசம்

**25.** திருமயிலைக் கீர்த்தனைகளை இயற்றியவர் யார்?

(1) கலைச்செல்வன் ஏரம்பு சுப்பையா
(2) அளவையூர் விநாசித்தம்பிப் புலவர்
(3) நவாலியூர் சோமசுந்தரப் புலவர்
(4) பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர்
(5) சுவாமி விபுலாநந்த அடிகளார்

**26.** 1928 ஆம் ஆண்டு அதிகாரபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்ட கலை நிறுவனம் யாது?

(1) சென்னை சங்கீத வித்துவ சபை
(2) கலாஷேத்ரா
(3) சுவாமி விபுலாநந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்
(4) இராமநாதன் நுண்கலைப் பீடம்
(5) வட இலங்கை சங்கீத சபை

**27.** பாகவதமேளாவில் வரும் நடனக் காட்சிகளுக்கு அரங்க அலங்காரம் செய்யப்படும் வர்ணம்

(1) சிவப்பு
(2) மஞ்சள்
(3) நீலம்
(4) வெள்ளை
(5) ரோஸ்

**28.** "உத்தக்கிட்ட கிண்ணத் தொங்க..." எனும் கணபதி கௌத்துவத்தினை இயற்றியவர் யார்?

(1) முத்துத்தாண்டவர்
(2) முத்துக்குமார நட்டுவனார்
(3) சுப்பராய நட்டுவனார்
(4) அருணாசல நட்டுவனார்
(5) கங்கைமுத்து நட்டுவனார்

**29.** ஈரோடு, பாலாவி ஆகிய பகுதிகளில் 'தப்பு' வாசித்து, வழிபாடு செய்வது எவ்வாறு அழைக்கப்படும்?

(1) தப்பு முறிப்பு
(2) தப்புக்கழிப்பு
(3) தப்பாட்டம்
(4) தப்புச்சேவை
(5) தப்புப்பரவல்

**30.** வண்ணை காமாட்சி சுந்தரம், மீனாட்சி சுந்தரம் ஆகியோரிடம் மிருதங்கம் கற்றுக் கொண்டவர்

(1) பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர்
(2) கீதாஞ்சலி வி. கே. நல்லையா
(3) பத்மஸ்ரீ அடையாறு கே. லட்சுமணன்
(4) பத்மபூசன் ச. வெ. சந்திரசேகர்
(5) பத்மபூசன் நரசிம்மாச்சாரியார்

[பக். 4 ஐப் பார்க்க

Past Papers Wiki



**31.** 'சாட்சுவீய சாத்வீகம்' என்பது
(1) கண்களால் அபிநயித்தல் ஆகும்.
(2) கைகளினால் அபிநயித்தல் ஆகும்.
(3) கழுத்தினால் அபிநயித்தல் ஆகும்.
(4) தலையினால் அபிநயித்தல் ஆகும்.
(5) ஆடை, ஆபரணங்களால் அபிநயித்தல் ஆகும்.

**32.** கருணா ரஸத்தின் எதிர் ரஸம், நிறம், தேவதை என்பன முறையே
(1) ஹாஸ்யம், சாம்பல், யமன் (2) ரௌத்ரம், மஞ்சள், பிரமன்
(3) வீரம், சிவப்பு, விஸ்ணு (4) பயானகம், வெளிர் சிவப்பு, இந்திரன்
(5) சாந்தம், நீலம், சிவன்

**33.** "சின்னச் சின்னப் பாதம் வைத்து கண்ணா நீ வா..." என்னும் பாடலடியினை அபிநயிக்கப் பயன்படுத்தப்படும் பக்தி
(1) மதுர பக்தி (2) வாத்ஸ்சல்ய பக்தி (3) மூர்க்க பக்தி
(4) தாஸ்ய பக்தி (5) சாக்கிய பக்தி

**34.** ஆனந்த தாண்டவத்தின் மறுபெயர் யாது?
(1) சந்தியா தாண்டவம்
(2) ஊர்த்துவ தாண்டவம்
(3) பஞ்சகிருத்திய பரமானந்த தாண்டவம்
(4) கௌரி தாண்டவம்
(5) முனி தாண்டவம்

**35.** திரிகாலத் தீர்மானத்துடன் ஆரம்பிக்கும் உருப்படி
(1) தில்லானா (2) ஜதிஸ்வரம் (3) அலாரிப்பு
(4) பதவர்ணம் (5) சப்தம்

**36.** புறத்திணை இயலுள் பகைவர் நாட்டின் மீது படையெடுத்து அங்குள்ள பசுக்களைக் கவர்ந்து வந்து தன்மக்களுக்கு பகிர்ந்து மகிழ்வுடன் கள்ளினை அருந்தி ஆடுவது
(1) குறவஞ்சி எனப்படும். (2) குரவை எனப்படும்.
(3) வெறியாடல் எனப்படும். (4) துணங்கை எனப்படும்.
(5) உண்டாட்டு எனப்படும்.

**37.** 'பட்டுதல் மாத்ரய' எனப்படுவது
(1) தெய்வங்களிடமிருந்து நன்மைபெறும் நோக்கத்துடன் ஆடுவதாகும்.
(2) உடலைச் சுற்றி ஆடுவதாகும்.
(3) பிசாசுகளுக்கு சாந்திக் கருமம் செய்யும்போது ஆடுவதாகும்.
(4) விவசாயத்தில் ஈடுபடும் கிராமியப் பெண்கள் ஆடுவதாகும்.
(5) இசை ஒழுங்குகளைப் பயன்படுத்தி ஆடுவதாகும்.

**38.** "பொய்தல் ஆடிய பொய்யா மகளிர் குப்பை வெண்மணல் குரவை நிறூ உம்..." எனும் ஐங்குறுநூறு பாடல் அடி புலப்படுத்தும் ஆடல் வகை
(1) நெய்தல் நிலக்குரவை (2) மருத நிலக்குரவை
(3) பாலை நிலக்குரவை (4) குறிஞ்சி நிலக்குரவை
(5) முல்லை நிலக்குரவை

**39.** கண்டிய நடனத்தில் நிருத்தம், நிருத்தியம், நாட்டியப் பகுதிகளை முறையே கொண்ட தெரிவு யாது?
(1) யக்ஹனும, ஹத்பதய, கொஹம்பஹல்ல
(2) ஆவந்தும, துணுமாலக்புவ, அஸ்னே
(3) குருகேமாலாவ, யக்கம், கபடாகொள்ளய
(4) ஹத்பதய, ஆவந்தும, குருகேமாலாவ
(5) யக்கம், கபடாகொள்ளய, யக்ஹனும

**40.** தாளதசப் பிராணன்களில் $\overset{|}{8}$ எனும் குறியீடு எதனைக் குறிக்கிறது?
(1) அனுத்ருதம் (2) குரு (3) லகுத்ருதம்
(4) காகபாதம் (5) புலுதம்

[பக். 5 ஐப் பார்க்க

● **41** தொடக்கம் **45** வரையான வினாக்களுக்குப் பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

| பிரதேசம் | கூத்து | இசைக்கருவிகள் | பாடல் / இசை அமைப்பு | கதையமைப்பு |
|---|---|---|---|---|
| **A** | வடமோடி | யாழ்<br>குழல்<br>முழவு | 'கந்தார்த்தம்' என்ற பாடல் மெட்டு | இராம நாடகம்<br>குசல நாடகம் |
| மன்னார் | **B** | தவில்<br>புல்லாங்குழல்<br>முரசு | வசனம் கலந்த பாட்டு, சிந்து | கிறிஸ்தவப் புனிதர்கள் |
| யாழ்ப்பாணம் | தென்மோடிக் கூத்து | **C** | மரபுசார் மெட்டுக்கள் | கத்தோலிக்கம் சார்ந்தவை |
| மன்னார் | தென்பாங்கு | டோலக்<br>ஹார்மோனியம்<br>மிருதங்கம் | **D** | இராமாயணம்<br>மகாபாரதம் |
| மட்டக்களப்பு | மகிடிக்கூத்து | மகுடி | மந்திரதந்திரங்கள் | **E** |

**41.** **A** இல் இடம்பெற வேண்டிய பிரதேசம் யாது?
(1) மன்னார்
(2) மட்டக்களப்பு
(3) கொழும்பு
(4) மலையகம்
(5) கதிர்காமம்

**42.** **B** இல் இடம்பெற வேண்டிய கூத்து யாது?
(1) மகிடிக் கூத்து
(2) காத்தவராயன் கூத்து
(3) வாசாப்புக் கூத்து
(4) காமன் கூத்து
(5) அருச்சுனன் கூத்து

**43.** **C** இல் இடம்பெற வேண்டிய இசைக்கருவிகள் யாவை?
(1) மகுடி, வயலின், வீணை
(2) மிருதங்கம், சல்லாரி, ஹார்மோனியம்
(3) தவில், முரசு, புல்லாங்குழல்
(4) யாழ், சங்கு, முழவு
(5) பறை, மகுடி, யாழ்

**44.** **D** இல் இடம்பெற வேண்டிய பாடலமைப்புகள் யாவை?
(1) கந்தார்த்தம், வஞ்சித்துறை
(2) சிந்து, வசனம்
(3) ஒப்பாரி, ஏற்றப்பாட்டு
(4) தேவாரம், கலிப்பா
(5) வெண்பா, கவிதை

**45.** **E** இல் இடம்பெற வேண்டிய கதையமைப்பு யாது?
(1) காமன் கதை
(2) அருச்சுனன் பாசுபதம் பெற்ற கதை
(3) இராமாயணக் கதை
(4) சிங்கன், சிங்கி கதை
(5) குசல நாடகக் கதை

PAST PAPERS WIKI

46. இப்படத்தில் காட்டப்பட்டுள்ள சாஸ்திரிய நடன மரபில் அரச சபைகளில் ஆடியோர் யார்?



(1) பீதர் காலனியர்கள்
(2) மாணிக்கத்தார்
(3) மெய்த்திகள்
(4) பாஹர் காவன்யர்
(5) ரிஷபத்தளியிலார்

47. இப்படத்தில் காட்டப்பட்டுள்ள ரஸத்தின் நிறம் யாது?




(1) பச்சை
(2) கருமை
(3) மஞ்சள்
(4) வெள்ளை
(5) சாம்பல்

48. இப்படத்தில் தரப்பட்டுள்ள அவதார புருஷரை உதாரணமாகக் கொண்ட நாயகன் யார்?



(1) தீரோத்ததன்
(2) தீரோதாத்தன்
(3) தீரகாந்தன்
(4) தீரசாந்தன்
(5) தீரலலிதன்

49. இப்படத்தில் காட்டப்பட்டுள்ள முனிவரின் பாத நிலை யாது?



(1) சமசூசி
(2) பார்ஷ்வசூசி
(3) ப்ரம்ஹஸ்தானம்
(4) மோடிதம்
(5) ஏகபாதம்

50. இப்படத்தில் காட்டப்பட்டுள்ள இசைக்கருவியை மாட்டிக்கொண்டு சுழன்று சுழன்று ஆடும் நடன மரபு இடம்பெறும் சாஸ்திரிய நடனம் யாது?



(1) குச்சுப்புடி
(2) மோகினி ஆட்டம்
(3) ஒடிசி
(4) கதக்
(5) மணிப்புரி

* * *

Past Papers Wiki



සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

නර්තනය (භරත) II
நாட்டியம் (பரதம்) II
Dancing (Bharatha) II

53 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி I இல் **முதலாம்** வினா உட்பட **இரண்டு** வினாக்களையும் பகுதி II இல் எவையேனும் **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி I

1. (அ) (i) மிஸ்ர சாபு தாளத்தில் அமைந்த அலாரிப்பின் இராகம், நாட்டிய அமைப்பு என்பவற்றினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) மிஸ்ர சாபு தாளத்தில் அமைந்த அலாரிப்பினைத் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுக. (08 புள்ளிகள்)

(ஆ) (i) நீர் கற்ற தில்லானாவின் இராகம், தாளம் என்பவற்றினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) மேலே (i) இல் குறிப்பிட்ட இராகத்தில் அமைந்த தில்லானாவின் அனுபல்லவிக் கோர்வையினைத் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுக. (08 புள்ளிகள்)

2. (அ) (i) மோகினி ஆட்டக் கலைஞர்கள் **இருவரின்** பெயர்களையும், அந்நடனத்திற்குப் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகள் **இரண்டினையும்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) மோகினி ஆட்டம் பற்றிய குறிப்புகள் காணப்படும் நூல்கள் **மூன்றினைத்** தருக. (03 புள்ளிகள்)

(ஆ) (i) ஒடிசி நடனம் ஆடப்படும் உற்சவங்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) ஒடிசி நடனத்தின் உருவாக்கத்திற்காக கூட்டிணைந்த மரபுகள் **நான்கினைத்** தருக. (04 புள்ளிகள்)

(இ) (i) மெய்த்திகளினால் ஆடப்பட்ட சாஸ்திரிய நடன வளர்ச்சிக்கு இராஜ ஸ்ரீ பாக்கியச் சந்திரா ஆற்றிய பணிகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) மேலே (i) இல் குறிப்பிட்ட சாஸ்திரிய நடனத்தின் ஆட்ட முறைகளை விவரிக்குக. (05 புள்ளிகள்)

3. (அ) தாள தசப் பிராணன்களை ஸ்லோகத்தில் எழுதி, யதி பற்றி விளக்குக. (10 புள்ளிகள்)

(ஆ) 'பாவம்' என்பதன் கருத்தை விவரித்து, அதன் பிரிவுகள் ஒவ்வொன்றையும் விளக்குக. (10 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

## பகுதி II

**4.** பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, பரத நாட்டிய மேடையமைப்பினை விளக்குக.

(அ) அரங்கம்

(ஆ) ஒலி

(இ) ஒளி

(ஈ) காட்சி விதானிப்பு (05 × 4 = 20 புள்ளிகள்)

**5.** பரதநாட்டியக் கலை வளர்ச்சிக்கு அரும்பணியாற்றிய பின்வரும் நடனக் கலைஞர்களின் வாழ்க்கை வரலாற்றினையும் கலைப் பணிகளையும் விவரிக்குக.

(அ) கனம் ஈ. கிருஷ்ணய்யர் (10 புள்ளிகள்)

(ஆ) கலைச்செல்வன் ஏரம்பு சுப்பையா (10 புள்ளிகள்)

**6.** நாயக்கர் கால நடனக் கலையின் வளர்ச்சி, சிறப்பம்சங்கள் என்பன பற்றி விளக்குக. (20 புள்ளிகள்)

**7.** "இலங்கையில் தற்காலத்தில் இடம்பெறும் பரத நாட்டிய ஆற்றுகைகளில் இளம் ஆண் கலைஞர்களின் பிரவேசங்கள் அதிகரித்துள்ளன." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க. (20 புள்ளிகள்)

**8.** பின்வருவனவற்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

(அ) குரவைக்கூத்து

(ஆ) சங்கு

(இ) சப்ரகமுவ நடனம்

(ஈ) தளிர்ச்சேரிக் கல்வெட்டுக்கள்

(05 × 4 = 20 புள்ளிகள்)

* * *

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library